www.kalvikural.com

கருக்கம்

பள்ளிக்கல்வி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவ/மாணவியர் ஒவ்வொருவருக்கும் தற்போது வழங்கப்படும் ரூ.50,000/–லிருந்து ரூ.75,000/–நிதி உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித்[பக5(2)] துறை.

அரசாணை (நிலை) எண். 195 நாள்: 27.11.2014

(திருவள்ளுவராண்டு 2045 கார்த்திகை 11)

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.39, பள்ளிக் கல்வித் துறை, நாள் 30.03.2005.
2. அரசாணை (நிலை) எண்.127, பள்ளிக் கல்வித் துறை, நாள் 01.07.2005.
3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் 30.07.2014 அன்று வெளியிட்ட அறிவிப்பு.

*******

**ஆணை :–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ/மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ/ மாணவியர் ஒவ்வொருவருக்கும் ரூ. 50,000/– நிதி வழங்கப்படும் என்றும், இந்த நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டு, அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ/மாணவியரின் கல்விச் செலவிற்காகவும், அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும் என்றும் ஆணை வெளியிடப்பட்டது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதி ஒதுக்கீடும், அதற்குரிய வழிகாட்டு நெறிமுறைகளும் வகுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன்கீழ் 30.07.2014 அன்று பின்வரும் அறிவிப்பினை சட்டமன்றப் பேரவையில் வெளியிட்டுள்ளார்கள் :–

*"வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியை தொடர்ந்து*

www.kalvikural.com



*கற்க இயலாத நிலை ஏற்படும் சமயத்தில், அவர்களது குழந்தைகள் தங்களது கல்வியை தொடர்ந்து கல்வி கற்கும் வகையில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியர், ஒவ்வொருவருக்கும் 50,000/- ரூபாய் நிதி வழங்கும் திட்டம் என்னால் 2005 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் தொகை இனி 75,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தினால் அரசுக்கு 2 கோடியே 70 லட்சம் ரூபாய் கூடுதலாக செலவு ஏற்படும்."*

3. மேலே பத்தி 2-ல் காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது :-

(i) "வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியை தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படும் சமயத்தில், அவர்களது குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்கும் வகையில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியர், ஒவ்வொருவருக்கும் நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் ரூ.50,000/- தொகை இனி ரூ.75,000/-(ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

(ii) இந்நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு, அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும்."

4. இத்திட்டத்தினை செயல்படுத்திட தேவையான நிதியினை வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்திட ஏதுவாக உரிய கருத்துருவினை நிதித்துறைக்கு சமர்ப்பிக்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.64493/Edn-II/2014, நாள்:26.11.2014-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6

www.kalvikural.com



மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.
மாநில கணக்காயர், சென்னை-18 / 35.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மின்விசை நிதி
மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை-35.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்கு துறை, சென்னை-15.

நகல்

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9
அரசு செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், பிற்ப்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்ப்படுத்தப்பட்டோர்
மற்றும் சீர்மரப்பினர் நலத் துறை, சென்னை-9.
அரசு செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டம் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர்,
சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை, சென்னை-9.
இயக்குநர், சமூக நலத்துறை, சென்னை-5.
இயக்குநர் ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை-5.
இயக்குநர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை-5.
ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-2.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், பனகல் மாளிகை, சென்னை-15.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வி (வரவு செலவு / அநுமு ) த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/1/14
பிரிவு அலுவலர்